தடம்

யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி

2010 THADAM

J/CHAVAKACHCHERI HINDU COLLEGE CHAVAKACHCHERI *september -december* VOLUME 3 ISSUE 3

பரிசில் நாள் – 2010

எமது கல்லூரிப் பரிசில் நாள் கடந்த 24.09.2010 வெள்ளிக்கிழமை பிரதான மண்டபத்தில் அதிபர் திரு அ.கயிலாயபிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக திரு தி.இராசாநயகம் (பிரதி பிரதம செயலாளர், நிர்வாகம் - வடக்கு மாகாணம்) அவர்கள் கலந்து சிறப்பித்தார். சிறப்பு விருந்தினராக திரு யோ.ஜெயக்குமார் (உதவிப் பதிவாளர், யாழ்.பல்கலைக்கழகம்) அவர்கள் கலந்து சிறப்பித்தார். ஜக்கிய இராச்சியத்தின் எமது பழைய மாணவர் ஆசிரியர் சங்க ஸ்தாபக உறுப்பினர் திரு ச.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டார். மேலும் வலயக் கல்விப் பணிப்பாளர், கோட்டக் கல்வி அலுவலர், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், முதன்மை ஆசிரியர்கள், எமது கல்லூரி ஓய்வு பெற்ற ஆசிரியர்கள், முன்னாள் அதிபர் திரு இ.கயிலைநாதன் அவர்கள், முன்னாள் உப அதிபர்கள், திரு க.அருணாசலம், திரு செ.சபாரத்தினம் ஆகியோரும், மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர், நலன்விரும்பிகள் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

சிரேஷ்ட மாணவ தலைவன் செல்வன் ப.ஜங்கரனின் வரவேற்புரையுடன் ஆரம்பமானது. முதன்மை விருந்தினர் அவர்கள் தமது உரையிலே இன்றைய சூழலில் மாணவர்களின் நடத்தைகள் சீராக்கம் செய்யப்பட வேண்டியதன் அவசியம் பற்றியும், மாணவரின் ஒழுக்கத்திற்கு பெற்றோருடன் ஆசிரியரும் மிகவும் முக்கியமான பங்காளிகளாக செயற்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டதுடன், மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கு ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவை பற்றியும் குறிப்பிட்டார். இன்முகத்தோடு எமது மாணவச் செல்வங்களுக்கு பரிசில்கள் வழங்கிச் சிறப்பித்தார்.

அதிபர் அவர்கள் தமது தலைமையுரையிலே இப்பரிசளிப்பு நிகழ்வானது இரண்டு வருடங்களுக்குரிய பரிசில்களை வழங்கும் நிகழ்வு என்று குறிப்பிட்டு, இதன் முக்கியத்துவம் பற்றி எடுத்துக் கூறினார். - 800 இற்கு மேற்பட்ட மாணவர்கள் பரிசில்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும். இம்முறை சிறந்த நடிகர், நடிகைக்கான பரிசில்களும், சிறந்த வகுப்பறை முகாமைத்துவத்திற்கான பரிசில்களும் மாணவர்கட்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

சிரேஷ்ட மாணவ தலைவி செல்வி உ.அபிராவின் நன்றியுரையுடனும் கல்லூரிக் கீதத்துடனும் நிகழ்வு இனிதாக நிறைவு பெற்றது.

ஆசிரியர் தினம் - 2010

எமது கல்லூரியில் ஆசிரியர் தினம் கடந்த 05.10.2010 அன்று காலை கல்லூரிப் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது. பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் ஆகியவற்றின் அனுசரணையுடன் கல்லூரி மாணவர் தலைவர்கள், மாணவர்களால் ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட்டனர். பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்

திரு கு.சதாசிவமூர்த்தி (முன்னாள் அதிபர் - பலாலி ஆசிரியர் கலாசாலை) அவர்களின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக திரு க.அருணாசலம் (முன்னாள் உப அதிபர் - யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி, இணைப்பாளர் சிலாபம் சர்வதேசப் பாடசாலை) அவர்கள் கலந்து சிறப்பித்தார். மற்றும் முன்னாள் அதிபர் திரு இ.கயிலைநாதன் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர், பழையமாணவர் சங்கப் பிரதி நிதிகள் ஆகியோரும் கலந்து இந்நிகழ்வைச் சிறப்பித்தனர். அடுத்த ஆசிரியர் தினத்திற்கு முன்னர் ஓய்வு பெறுகின்ற எமது கல்லூரி உப அதிபர் திரு சி.த.இரத்தினம் அவர்களுக்கும், எமது கல்லூரி கணித ஆசானும், பகுதித் தலைவருமாகிய திரு ந.அருட்சோதிவர்ணன் ஆசிரியர் அவர்களுக்கும் பிரதம விருந்தினர் அவர்கள் கேடயம் வழங்கி கௌரவித்தார்.

மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும், ஆசிரியர்களின் நிகழ்வுகளும் இடம்பெற்றன. விழா சிறப்புற நிறைவு பெற்றது.

போட்டிகள் சாதனைகள்
தேசிய ரீதியில் சாதனை



எமது கல்லூரி மணாவர்குழு கடந்த வாரம் கொழும்பிலே நடைபெற்ற 2010 ஆம் ஆண்டிற்கான தேசிய மட்ட தமிழ்மொழித் தின தமிழறிவு வினாவிடைப் போட்டி நிகழ்வில் பங்குபற்றி தேசிய நிலையில் இரண்டாமிடத்தைப் பெற்றுக் கொண்டது. இக்குழுவில் பங்குபற்றிய மாணவர் விபரம்

செல்வன்.வ.சரவணபவன்	12A1
செல்வி ச.குகப்பிரியா	12A2
செல்வி த.கஸ்தூரி	12A2
செல்வி நி.கீர்த்தனா	13A
செல்வி ஸ்ரீ.ரம்யா	11D

இம்மாணவர்களைப் பாராட்டுவதோடு மேலும் இவர்கள் சாதனைகள் படைக்க வேண்டும் என தடம் செய்தி ஏட்டினூடாக வாழ்த்துகின்றோம். இம்மாணவர்களுக்குப் பொறுப்பாக இருந்து பயிற்றுவித்த ஆசிரியை திருமதி க.ஸ்ரீதரன் அவர்களின் அர்ப்பணிப்பான பணியினைப் பாராட்டுவதோடு, கல்லூரித் தமிழ்க் குழுவினரையும் பாராட்டுகின்றோம்.

கணித விஞ்ஞானப் போட்டி - 2010

வலய மட்டத்தில் தெரிவான மாணவர் விபரங்கள்

கணிதம் (தமிழ்மொழிமூலம்)

தரம் - 6
- தெ.கிருசன் - 2ம் இடம்
- சோ.யதுர்ஷன் -

தரம் - 7
- இ.விஹானி - 1ம் இடம்
- ந.வர்ணராஜ் - 2ம் இடம்
- பெள.மைட்றேயன் -
- த.பிரதீபன்
- இ.சாரங்கன்

கணிதம் (ஆங்கிலம் மூலம்)

தரம் - 6
- ச.கிருத்திகா - 2ம் இடம்
- அ.அபூசன் - 3ம் இடம்

தரம் 7
- இ.மதுஷா - 2ம் இடம்
- வி.மதனிகா - 3ம் இடம்
- ஜெ.ஜெயதாரணி - 3ம் இடம்

தரம் - 8
- ச.கிருஷிகா - 1ம் இடம்

தரம் - 9
- T.பிரகாஷ் - 1ம் இடம
- S.சந்திரோதயன் - 2ம் இடம்

தரம் - 10
- K.கபிலன் - 2ம் இடம்
- S.கீறிடி - 3ம் இடம்

தரம் 11
- S.கௌசிகா - 1ம் இடம்
- S.சஜித்தா - 2ம் இடம்
- P.தேனுஜன் - 3ம் இடம்
- P.தர்சினி - 3ம் இடம்

விஞ்ஞானம் (ஆங்கில மொழி மூலம்)

தரம் - 6
- S.கிருத்திகா

தரம் - 7
- வி.மதனிகா - 1ம் இடம்
- S.சோபனா - 3ம் இடம்

தரம் - 8
- S.கிருத்திகா

தரம் - 9
- J.A.சந்திரோதயன் - 3ம் இடம்

தரம் - 11
- S.சஜிதா - 1ம் இடம்
- S.சாஜீசன் - 2ம் இடம்
- உ.தர்சினி - 3ம் இடம்

விஞ்ஞானம் (தமிழ் மொழி மூலம்)

தரம் - 6
- க.கம்ஷிகா - 2ம் இடம்
- தே.தனுஷி

தரம் - 7
- சி.ஜனந்தன் - 1ம் இடம்

இ.விஹானி - 1ம் இடம்
த.பிரணவன் - 2ம் இடம்
சி.மேனகா

தரம் - 8

செ.சாரங்கன் - 1ம் இடம்
த.சங்கீத் - 3ம் இடம்
கு.விதுர்ஜா

தரம் - 10

வே.திரிஷா - 1ம் இடம்
இ.கீர்த்தனா
சி.சுஜீவன்
ஸ்ரீ:துளசிகரன்

தரம் - 11

த.தர்சிகன் - 1ம் இடம்
இ.மாதவன் - 2ம் இடம்
இ.தனீபன் - 3ம் இடம்
மு.சிந்துஜா - 3ம் இடம்
சி.நிரோசன்

மாகாண மட்டத்தில் கணிதப் போட்டியில் இரண்டு மாணவர்கள் வெற்றி பெற்றுள்ளனர்.

தரம் - 7

வி.மதனிகா - 3ம் இடம்

தரம் - 9

J.M.சந்திரோதயன் - 3ம் இடம்

இப்போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெற்ற மாணவர்களை மேலும் வெற்றி பெற வாழ்த்துவதுடன் பயிற்றுவித்த ஆசிரியர்களையும் நன்றியுடன் பாராட்டுகின்றோம்.

அகில இலங்கை ரீதியில் தங்கப்பதக்கம்

அகில இலங்கை உயிரியல் ஒலிம்பியாட் போட்டி - 2010 இல் எமது கல்லூரியின் மாணவன் செல்வன் ஸ்ரீமுருகதாஸ் விசாகன் தங்கப்பதக்கத்தைப் பெற்று எமது கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளார். உயிரியற் பிரிவில் கல்விபயிலும் மாணவர்களுக்கிடையில் ஒவ்வொரு வருடமும் இப்போட்டிப் பரீட்சை நடாத்தப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். இவருக்கான பரிசளிப்பு நிகழ்வு கடந்த 24.09.2010 அன்று கொழும்பு 7 இல் அமைந்துள்ள SLAAS கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் அகில இலங்கை ரீதியில் சிறப்பாக விடையளித்த 15 மாணவர்கள் தங்கப்பதக்கம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். இவர்களில் தமிழ் மொழி மூலம் தோற்றிய நான்கு மாணவர்களில் ஸ்ரீ.விசாகனும் ஒருவர் என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டியதாகும். இவருக்குரிய தங்கப்பதக்கத்தை இலங்கை உயிரியல் ஒலிம்பியாட் அமைப்பின் தேசிய இணைப்பாளர் Dr.ஹிரன் அமரசேகரா மற்றும், இலங்கை உயிரியற் சங்கத் தலைவர் Dr.D.விக்கிரமசிங்க ஆகியோர் இணைந்து வழங்கிக் கௌரவித்தனர். எமது கல்லூரி மாணவன் ஸ்ரீ.விசாகன் மேலும் சிறப்புக்கள் பெற்று உயர்வடைய வேண்டுமென தடம் செய்தியேட்டினூடாக வாழ்த்துகின்றோம்.

கல்விச் சுற்றுலா





பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீட மாணவர்களால் நடத்தப்பட்ட கல்விக் கண்காட்சியை எமது கல்லூரியைச் சேர்ந்த க.பொ.த (உ/த) விஞ்ஞானப் பிரிவைச் சேர்ந்த தரம் 12,13 மாணவர்கள் சென்று பார்வையிட்டனர். பொறுப்பாசிரியர்களாக செல்வி இ.நடராசா, செல்வி க.துஷ்யந்தி, செல்வி ப.சைந்தவி, திரு ஆ.வைகுந்தன், திரு.G.உதயகுமார், திரு ச.சசீஸ்குமார், திரு S.சதாசிவன் ஆகியோர் இம்மாணவர்களை அழைத்துச் சென்றனர். மாணவர்க்கு மிகவும் பயனுடைய கண்காட்சியாக இது அமைந்திருந்தமை குறிப்பிடக் கூடிய விடயமாகும். இன்றைய நவீன அறிவியல் வளர்ச்சியுடன் போட்டி போட்டு மாணவர்கள் தம் அறிவை விருத்தி செய்து கொள்ள இத்தகைய களப்பயணங்கள் அவசியமானவையாகும்.

வாழ்த்துகின்றோம்

எமது கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றிய திரு சி.தயாபரன் அவர்கள் அதிபர் தரம் III பதவியுயர்வு பெற்று யா/வரணி கரம்பைக் குறிச்சி அ.த.கபாடசாலையில் அதிபராகக் கடமையாற்றுகின்றார். மேலும் பல உயர்வுகள் பெற்று வாழ்வில் எல்லா வளங்களும் பெற்று வாழ தடம் செய்தி ஏட்டினூடாக இந்துக் கல்லூரிச் சமூகம் வாழ்த்துகின்றது.

மஹிந்த சிந்தனையில் பாடசாலை அபிவிருத்தித் திட்டம்

மஹிந்த சிந்தனையின் கீழ் நாடு முழுவதிலுமுள்ள 1000 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. வடமாகாணத்தில் 60 பாடசாலைகள் இத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டுள்ளன. தென்மராட்சி வலயத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் எமது கல்லூரி முதலாவதாக தெரிவு செய்யப்பட்டுள்ளது. 60 மில்லியன் ரூபா பெறுமதியான அபிவிருத்தி வேலைகள் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். எமது கல்லூரி இத்திட்டத்திற்கென தெரிவு செய்யப்பட்டமை மிக்க மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

பழைய மாணவர் அன்பளிப்பு

எமது கல்லூரி பழைய மாணவர் மீசாலையைச் சேர்ந்த திரு.மயில்வாகனம் கமலேஸ்வரன் சுவிற்ச்லாந்திலிருந்து எமது கல்லூரிக்கு வருகை தந்து ரூபா 75,000 அன்பளிப்பாக எமது கல்லூரிக்கு வழங்கியுள்ளார். இந்த நிதியில் 120 பிளாஸ்ரிக் கதிரைகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

♦எமது கல்லூரி ஆசிரியர் திருமதி ஜெயகலா ஸ்ரீபாஸ்கரதாஸ் அவர்கள் பாடசாலை அபிவிருத்திக்காக ரூபா 50,000 அன்பளிப்புச் செய்துள்ளார்.

♦மீசாலை மேற்கு திரு சிவகுமார் அவர்கள் பாடசாலை அபிவிருத்திக்காக 3000 ரூபாவை அன்பளிப்புச் செய்துள்ளார்.

♦நோர்வே, கனடா, பிரான்ஸ் பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் எமது கல்லூரிக்கு வருகை தந்தனர். நோர்வே பழைய மாணவர் சங்கம் சிற்றுண்டிச்சாலை அமைப்பதற்கான முற்பணமாக ரூபா 75,000 வழங்கியுள்ளது.

♦சாவகச்சேரி வடக்கைச் சேர்ந்த திரு சுப்பிரமணியம் புலேந்திரலிங்கம் குடும்பத்தினர் ரூபா 75,000 பெறுமதியான பிரதான மண்டபத்தில் மாணவர்கள் இருப்பதற்கான 70 வாங்குகள் அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

யாழ் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களின் நிதியுதவி

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து எமது பாடசாலையில் உள்ளக தொலைபேசி வசதிகளை ஏற்படுத்துவதற்காக யாழ்மாவட்டத்தைச் சேர்ந்த மூன்று பாராளுமன்ற உறுப்பினர்கள் நிதியுதவிகளை வழங்கியுள்ளனர்.
கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் C.M.சுமந்திரன் அவர்கள் ரூபா 2,00,000
கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் சரவணபவன் அவர்கள் ரூபா 1,50,000
கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா அவர்கள் ரூபா 75,000
இந்நிதியின் மூலம் 16 உள்ளகத் தொலைபேசி இணைப்பும், மேற்பார்வைக் கமராக்களும், ஒரு மடி கணனியும் (Laptop) கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

எமது கல்லூரியின் வளர்ச்சியை நோக்காகக் கொண்டு நிதி உதவியினை வழங்கிய அனைவருக்கும் கல்லூரிச் சமூகத்தின் சார்பாக நன்றியும், பாராட்டுக்களும் என்றும் உரியனவாகும்.

பாடசாலைக் கட்டடத் திருத்தம்

மத்திய கல்வி அமைச்சினால் பாடசாலைத் திருத்த வேலைகளுக்காக ரூபா 7 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டது. RAAN மண்டபத்தின் கீழ்த்தளத்தின் மூன்று வகுப்பறைகள் இரும்புக் கிறில் மூலம் அடைக்கப்பட்டு கதவுகள் போடப்பட்டுள்ளதுடன் 220 அடி நீளமான கீழ்த்தளப் பகுதி வர்ணந் தீட்டப்பட்டுள்ளது. அத்துடன் கீழ்த்தளம் முழுவதும் மின் இணைப்பும் வழங்கப்பட்டுள்ளது.

பகுதித்தலைவர் நியமனம்

எமது கல்லூரியில் புதிய பகுதித்தலைவர்களாக இருவர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். திருமதி ப.இரத்தினசிங்கம், திரு ஓ.விஜயதாசன் ஆகியோர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இவர்களின் அர்ப்பணிப்பான சேவையைப் போற்றுவதுடன் மேலும் சிறப்பான பணியாற்ற தடம் செய்தியேட்டினூடாக வாழ்த்துகின்றோம்.

இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்கள் விபரம்

திரு ந.சிவசங்கரசர்மா, திருமதி அ.ரஜீவன் ஆகியோர் எமது கல்லூரியில் கற்பித்து அண்மையில் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளனர். இவர்கள் எமது கல்லூரியிற் செய்த அர்ப்பணிப்பான சேவையைப் பாராட்டுவதுடன் மேலும் இவர்கள் சிறப்பான பணி செய்து எல்லா நலன்களும் பெற வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

புதிதாக இணைந்த ஆசிரியர்கள்

எமது கல்லூரியில் புதிதாக மூன்று ஆசிரியர்கள் இந்தத் தவணையில் இணைந்துள்ளனர்.

திரு ப.மதனரூபன் - உடற்கல்வி (Dip in Teach)
திரு S.பிரகலாதன் - விஞ்ஞானம் (Dip in Teach)
செல்வி ஞா.தர்சிகா - மனைப்பொருளியல் (Dip in Teach)

தேசிய கல்வியியற் கல்லூரியில் இருந்து புதிதாக நியமனம் பெற்று எம்முடன் இணைந்து கொண்ட இவ்வாசிரியர்களை வரவேற்கின்றோம். இவ்வாசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவை எமது கல்லூரி வளர்ச்சிக்கு வலுச் சேர்க்கும் என நம்புகின்றோம். சிறந்த பணியாற்ற வாழ்த்துகின்றோம்.

சேவை நயப்பும் பாராட்டும்

எமது கல்லூரியில் 21 வருடங்களாக அர்ப்பணிப்போடு பணியாற்றிய எல்லோரதும் அன்புக்கும் மதிப்புக்கும் பாத்திரமான ஆசிரியரும் பகுதித்தலைவருமான திரு ந.அருட்சோதிவர்ணன் அவர்கள் இவ்வாண்டு ஓய்வு பெற்றுள்ளார். தனது 38 வருட சேவையில் இருபத்தோராண்டு காலம் இந்துவின் வளர்ச்சிக்காக அரும்பணியாற்றியவர். 1989 ஆம் ஆண்டில் எமது கல்லூரியில் கணித ஆசானாக இணைந்த ஆசிரியர் அவரக்ள் எமது கல்லூரிக்கு ஆற்றிய பணிகள் வார்த்தைகளுள் அடக்கி விடமுடியாத விஸ்தாரமானவை என்றுதான் கூற வேண்டும். மாணவர் உள்ளங்களை வென்ற கணித ஆசானாகவும், எல்லா ஆசிரியர்களிடமும் அன்புடனும் ஆதரவுடனும் பழகுகின்ற இனிய சுபாவமும் உடையவர்.

"பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவர்க்கு அணியல்ல மற்றுப் பிற"

என்ற வள்ளுவன் வாக்கிற்கு இலக்கணமாய் வாழ்ந்து கொண்டிருக்கும் பெருந்தகையாளர்.

பகுதித்தலைவராக, ஒழுக்காற்றுச்சபை மூத்த உறுப்பினராக, முகாமைத்துவக்குழு உறுப்பினராக, பாடசாலை அனுமதி, பரீட்சைப் பெறுபேறுகள் பகுப்பாய்வு முதலிய இன்னும் பல பணிகளைச் சிறப்புற ஆற்றிய பெருமைக்குரியவர். சிறந்த பண்பினாலும், கண்ணியமான கடமையினாலும் கல்லூரியின் வளர்ச்சிக்கு அரும்பணியாற்றிய ஆசிரியர் அவர்கள் ஓய்வு பெறுவது எமது கல்லூரிச் சமூகத்திற்கு ஈடு செய்ய முடியாத ஒரு இடைவெளி என்றுதான் கூற வேண்டும்.

நல்ல தேக ஆரோக்கியத்துடனும் மகிழ்வுடனும் இவரது ஓய்வு காலம் சிறக்க வேண்டுமென இறைவனை இறைஞ்சுகின்றோம்.

கிரிக்கெட் போட்டிகள்

13 வயதுப் பிரிவுக்கான இலங்கைப் பாடசாலைக் கிறிக்கெட் சங்கம் நடததிய ரன்கிலு கிறிக்கெட் போட்டி கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் அக்கல்லூரிக்கும், சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கும் இடையில் நடைபெற்றது. எமது கல்லூரி அணி வெற்றி பெற்றது.

நெல்லியடி மத்திய கல்லூரிக்கும், எமது கல்லூரிக்கும் இடையே நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் எமது கல்லூரி வெற்றியைப் பெற்றுக் கொண்டது.

சென்பற்றிக்ஸ் கல்லூரிக்கும் சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கும் இடையே எமது கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி நிறைவுபெற்றது.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலைக்கும் எமது கல்லூரிக்கும் இடையில் எமது கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற கிரிக்கெட் போட்டியில் எமது கல்லூரி அணி வெற்றி பெற்றுக் கொண்டது. இப்போட்டிகளில் பங்குபற்றிய எமது கல்லூரி கிரிக்கெட் அணி 3 போட்டிகளில் வெற்றியீட்டியும் 2போட்டிகளில் சம நிலையில் முடிந்தாலும் இறுதிப் போட்டியில் பங்குபற்றும் வாய்ப்பினைப் பெற்றுள்ளது.

இம் மாணவர்களைப் பாராட்டுவதுடன் மேலும் வெற்றிகள் பெற்று இந்துவின் புகழை எங்கும் பரப்ப வேண்டும் என வாழ்த்துகின்றோம். பயிற்றுவித்த ஆசிரியர் திரு ப.சுரேஸ அவர்களையும் பாராட்டுகின்றோம்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கும் சென்ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி நிறைவு பெற்றது.

தேசிய மட்டத்தில் முதலிடம்

எமது கல்லூரி தரம் 11D யில் கல்வி



கற்கும் மாணவி செல்வி ஸ்ரீ.றம்யா சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சு தேசிய ரீதியில் சிறுவர் உலகம் ஒளிபெற அனைத்துக் கரங்களையும் வலுவூட்டுவோம் என்ற தொனிப் பொருளில் நடத்திய கட்டுரைப் போட்டியில் சிரேஷ்ட பிரிவில் தேசிய மட்டத்தில் முதலாம் இடம் பெற்று 10,000ரூபா பணப் பரிசிலையும் சான்றிதழையும் மாண்புமிகு ஜனாதிபதி அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டார். மேலும் இவர் பல போட்டிகளில் கலந்து கொண்டு பரிசில்கள் பெற்றுக் கொண்டமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

■மகாஜனாக்கல்லூரி நடத்திய நூற்றாண்டு விழா கவிதைப் போட்டியில் முதலாம் இடம் பெற்று ரூபா 1,500 பரிசாகப் பெற்றுள்ளார்.

■ஜெய்ப்பூர் செயற்கைக் கால் உற்பத்தி நிறுவனம் நடத்திய கட்டுரைப் போட்டியில் மத்திய பிரிவில் 2ம் இடம் பெற்று ரூபா 1,500 பரிசாகப் பெற்றுக் கொண்டார்.

■மானிப்பாய் இந்துக் கல்லூரி நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடத்திய கட்டுரைப் போட்டியில் ஆறுதல் பரிசாக 1000 ரூபாவினைப் பெற்றுக் கொண்டார்.

■தேசிய கலை இலக்கியப் பேரவை நடர்திய 2009 ஆம் ஆண்டிற்கான கவிதைப் போட்டியில் 3ம் இடத்தையும், 2010 ஆம் ஆண்டிற்கான கட்டுரைப் போட்டியில் 3ஆம் இடத்தையும் பெற்றுச் சான்றிதழ்களும் பரிசிலும் பெற்றுள்ளார்.

பல போட்டிகளில் பரிசில் பெற்று எமது கல்லூரிக்குப் பெருமை சேர்த்த இம் மாணவியைப் பாராட்டுகின்றோம். மேலும் சிறப்புக்கள் பெற தடம் செய்தி ஏட்டினூடாக வாழ்த்துகின்றோம்.

பிரிவுபசார விழா

எமது கல்லூரியில் ஆசிரியர்களாகப் பணியாற்றி வெளிநாடு செல்லும் இரு ஆசிரியைகளின் சேவையை கௌரவிக்குமுகமாக கடந்த 19.11.2010 அன்று மாலை தேநீர் விருந்துபசார நிகழ்வு ஆசிரிய சகோதரத்துவத் தலைவரும், உப அதிபருமாகிய திரு.சி.த.இரத்தினம் அவர்கள் தலைமையில் T.V மண்டபத்தில் நடைபெற்றது. திருமதி ஜெயகலா ஸ்ரீபாஸ்கரதாஸ் அவர்கள் நடன ஆசிரியையாகக் கடந்த 09 ஆண்டுகள் எமது கல்லூரியில் சிறப்புறப் பணியாற்றி வெளிநாட்டிற்கு செல்கின்றார். செல்வி கி.பிரபாநந்தினி கற்பித்தலோடு கல்லூரி அலுவலகத்தில் நிர்வாகப் பகுதியிலும் சிறப்புறப் பணியாற்றி தனது உயர் கல்விக்காக வெளிநாடு செல்கின்றார். இவ்விரு ஆசிரியர்களையும் கௌரவிக்குமுகமாக நடைபெற்ற தேநீர் விருந்தில் அதிபர், ஆசிரியர்கள் அவர்களின் சேவையை நயந்தும் விதந்தும் உரையாற்றினர். ஆசிரிய சகோதரத்துவத்தினால் அவர்களிற்கான அன்பளிப்பும் வழங்கப்பட்டது.

இவ்வாசிரியர் மேலும் வாழ்வில் சகல பேறுகளும் பெற்று சிறப்புடன் வாழ வேண்டும் என தடம் செய்தி ஏட்டினூடாக வாழ்த்துகின்றோம்.

பாராட்டுகின்றோம்



எமதுகல்லூரி ஆசிரியர் திரு நா. இராஜன் அவர்கள் இவ்வாணடு நடை பெற்ற பட்டமளிப்பு விழாவில் முது கல்விமாணிப் (MEd) பட்டதைப்

பெற்றுள்ளார். திரு நா.ஸ்ரீகரன் முதுதத்துவமாணி (MPhil) ப்பட்டத்தைப் பெற்றுள்ளார். இவ்விரு ஆசிரியர்களையும் பாராட்டுவதுடன் மேலும் பல உயர்வுகள் பெற வாழ்த்துகின்றோம்.

வாணிவிழா

எமது கல்லூரியில் வருடந்தோறும் மிகச்சிறப்பான முறையில் கொண்டாடப்படும் வாணிவிழா இவ்வாண்டும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. நவராத்திரியை முன்னிட்டு சமய அறிவுப்போட்டி, கோலப்போட்டி என்பன நடாத்தப்பட்டு மாணவர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. மாணவர்களின் பட்டிமன்றம், கலைநிகழ்ச்சிகள் என்பன சிறப்பாக அமைந்திருந்தமை குறிப்பிட த்தக்கதாகும்.

யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி

க.பொ.த (உ/த) பரீட்சை

முன்னணிப் பெறுபேறுகள் - 2010

கணிதம்

மா	பெயர்	பெறுபேறு	மா நி	தே நி
1.	ஸ்ரீகரன் யசோதரன்	3A	5	52
2.	இராஜரத்தினம் பிரதீசன்	2AB	30	
3.	ஜெயகணேசன் ஜெயதர்சினி	2AB	38	
4.	புலேந்திரன் சஜந்தன்	A2B	63	
5.	மகாசிவம் மாதங்கி	A2B	71	
6.	செல்வநாயகம் ஜெகதீபன்	3B		
7.	குணபாலசிங்கம் கஸ்தூரி	ABC		
8.	அருட்பிரகாசம் கஜனானன்	ABC		
9.	சின்னத்துரை சோபிதன்	ABC		
10.	கனகரத்தினம் சோபிதா	2BC		
11.	பொன்னம்பலம் ஜெனோத்	ABC		

உயிரியல்

1.	சிறிமுருகதாஸ் விசாகன்	3A	6	39
2.	இராஜலிங்கம் மாதங்கி	2AB	21	
3.	சரவணமுத்து சபேசன்	A2B	36	
4.	முத்துலிங்கம் சுமன்	2AC	38	
5.	மகேஸ்வரன் ஞானகரன்	A2B	76	
6.	சனயன் டினோசன்	ABC	96	
7.	குமாரவேல்ராஜா கௌதமி	ABC	115	
8.	திருநாவுக்கரசு துசாந்தன்	ABC		

வர்த்தகம்

1.	தம்பையா நிரோஜினி	3A	9
2.	திருச்செல்வம் ஜெகத்	3A	17
3.	இந்திரபவன் சுபிதா	A2B	44
4.	தங்கவேல் ஜெகத்	2AC	46
5	பரமேஸ்வரன் சிந்துயா	2AC	54
6.	தனபாலசிங்கம் நிரோஜிதா	ABC	65
7.	சிவலோகநாதன் அஜந்தினி	2AC	131

கலை

1.	யோகேஸ்வரசர்மா மயூரி	3A	18
2.	நித்தியானந்தன் கீர்த்தனா	2AB	5
3.	நாகேந்திரன் லக்சிகா	2AC	6
4.	மகாதேவா ஆரணிகா	3A	10
5.	கிருஷ்ணசாமி சுகிர்தனா	2AB	21
6.	மகாராசா தனுசாலினி	2AB	26
7.	துரைநாதன் டிலக்ஸனா	A2B	22
8.	கணராசா ஜெயசாமினி	2AB	54
9.	ஜெயக்குமார் கயந்தினி	2AC	58
10.	சிவானந்தம் சிவானி	A2B	61
11.	சிவகுமாரன் சரண்யா	ABC	74
12.	ஞானேஷஸ்வரன் யசிதரன்	3B	89
13.	மகேஸ்வரன் நிறோஜன்	2AC	92
14.	சிவலிங்கராசா வேணுமதி	2AC	97
15.	ஆறுமுகராஜா கஜேந்தன்	3B	114
16.	கனகலிங்கம் கரிசங்கர்	ABC	123
17.	சிவசுப்பிரமணியம் மலரவன்	3B	124
18.	பரமசாமி தர்ஜத்திரா	ABC	134
19.	சிவராசா நிலானி	3B	139
20.	சிவகுமார் தெய்வகரன்	3B	124

22.	கருணாகரன் தனுஷா	ABC	160
23.	ஆனந்தராஜா கஜந்தினி	ABC	233
24.	தர்மரத்தினம் விமல்ராஜ்	2AC	190
25.	பாண்டியன் பவித்திரா	2 A C	236
26.	வீரசிங்கம் விஜயரூபி	A B C	262
27.	தபோதினி சர்மிலன்	A 2 C	286
28.	சடாச்சரம் சஜீவன்	3 B	396
29.	சுகுமாரன் தர்சிகா	2 B C	
30.	நிர்மலமூர்த்தி நிருபன்	A C S	

து.டிலக்சனா.

சி.சிவானி

சி.மலரவன்

க.கரிசங்கர்

சி.நிலானி

யோ.ஜனாத்தனன்

த.விமல்ராஜ்

நா.லக்சிகா

வீ.விஜயரூபி

கிடைக்கப்பெற்ற புகைப்படங்கள் மட்டுமே உள்ளன

தி.ஜெகத



பா.சிந்துஜா

லோ.மயூரீ

கி.சுகிர்தனா

ஜெ. ஜெயதர்சினி

இ.பிரதீசன்

ஸ்ரீ.யசேதரன்

சி.விசாகன்

இ.மாதங்கி

ம.ஆரணிகா

த.நிறோஜினி

சி.அஜந்தினி

English

National level English Day Competitions – 2009

National level English day Competition – 2009 was held on 6th November 2010 at Thirston college , Colombo. The following students got a chance to participate in creative writing.

1. Ms.Kulasingam kowsiga – Gr.7
2. Ms.Sivananthan Nishanthi – Gr.12

Provincial Level English Day Competition – 2010

Provincial level English Day Competition - 2010 was held in Mannar. Our school student Ms.Vijayathasan Mathaniga from Grade 7 won the first place in copy writing. She will be participating in the National level English Day Competition. We wish her all success.

யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி
நிறுவுநர் நாள் 2011.

காலம்:- 05.02.2011 சனிக்கிழமை
காலை 8.30 மணி

இடம்:-கல்லூரி அருணாசலம் மண்டபம்

தலைவர்:-திரு.அ.கயிலாயபிள்ளை
அவர்கள்
(கல்லூரி முதல்வர்)

முதன்மை விருந்தினர்
உயர்திரு. ப.விக்னேஸ்வரன் அவர்கள்
கல்விப்பணிப்பாளர் , வடமாகாணம்

தாபகர் நினைவுப் பேருரை
வைத்திய கலாநிதி
திரு. சா சிவயோகன் M.B.B.S, MD(psych)
யாழ். போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்

தாமேதரன் சஞ்சிகை வெளியீட்டுரை
பேராசிரியர் கி. விசாகரூபன்
தலைவர் தமிழ்த்துறை
யாழ் பல்கலைக்கழகம்.
தங்களை அன்புடன் அழைக்கின்றேம்..

யா/ சாவகச்சேரி இந்துக்கல்லூரி.
கல்லூரிச் சமூகம்.

நிகழ்ச்சி நிரல்

கல்லூரிக் கொடியேற்றல்

மங்கல விளக்கேற்றல்
தாபகர் திருவுருவப்படத்துக்கு
விளக்கேற்றல்

கடவுள் வணக்கம்

வரவேற்புரை -
திரு ந.பாலச்சந்திரன்
பிரதி அதிபர்
சாவகச்சேரி இந்துக் கல்லூரி

தலைமையுரை -
திரு அ.கயிலாயபிள்ளை
அதிபர்.
சாவகச்சேரி இந்துக்கல்லூரி

நிறுவுநர்

அமரர் வி. தாமோதரம்பிள்ளை
அவர்களின் நினைவுப்பேருரை.
"கற்றலை ஆளும் கர்த்தாக்கள்:
இடைநிலைக்கல்விசார் வினையாற்றல்களில்
செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்
பற்றிய தொரு பார்வை"

வைத்திய கலாநிதி
சா.சிவயோகன்M.B.B.S: MD(psych) -
யாழ் போதனா வைத்தியசாலை.

தாமோதரன் 2011 வெளியீடு
வெளியிட்டு வைப்பவர் -
உயர்திரு.பா விக்கினேஸ்வரன்.
கல்விப்பணிப்பாளர்- வட மாகாணம்

தாமோதரன் வெளியீட்டுரை
பேராசிரியர்.கி. விசாகரூபன்.

முதல்பிரதி பெறுநர்
-திரு இ.கைலைநாதன்
பதிலுரை -
திருமதி கமலாம்பிகை ஸ்ரீதரன்
(மலர் வெளியீட்டுக்குழு)

நன்றியுரை-திரு.சி.த. இரத்தினம
(துணை அதிபர், சாவகச்சேரி
இந்துக்கல்லூரி

கல்லூரிக் கீதம்.

எமது நோக்கு

ஜனநாயக சமூக முறையை ஏற்றுக் கொண்ட சமூகத்தில் சம தன்மை பரஸ்பர கண்ணியம் பரவலாக்கப்பட்ட பொறுப்புக்கள், ஒத்துழைப்பு, சுய ஒழுங்கு என்பன ஏற்படுகின்றன. இத்தகைய விழுமியங்களுடன் வகுப்பறைக்குச் செல்லும் போது மாணவர் ஆசிரியர் உறவுகளின் கோலங்கள் தாக்கத்திற்குட்படுகின்றன. கல்விச் சமூகத்தில் இத்தகைய மாற்றங்கள் மிக முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன. இன்று உள்ளது மாணவரின் நடத்தைப் பிரச்சினை என்று கூறுவதைவிட ஆசிரியர் - மாணவர் உறவுப் பிரச்சினை என்றுதான கூறவேண்டியுள்ளது. ஆசிரியர்கள் மாணவர்களுடனான தமது உறவுகளில் மேம்பாட்டை ஏற்படுத்திக் கொண்டு செல்ல, மாணவர்கள் தமது பிரச்சினையானநடத்தைகளைக் குறைத்துக் கொண்டு செல்வர். மாணவர்களின் பிழையான தனியாளிடைத் தொடர்புகளான வன்முறை, முரட்டுத்தனம், களவு, ஊக்கக் குறைவு, பணிவின்மை என்பவைகளின் தொடர் விளைவுகளில் கவனம் செலுத்துவதை விட அடிப்படைப் பிரச்சினையான ஆசிரியர் - மாணவர் உறவுகளில் ஆசிரியர்கள் கவனம் செலுத்தவேண்டியது மிகவும் பொருத்தமானதாகும். எனவே மாணவரின் வகுப்பறை நடத்தைகளை மேம்படுத்தப் பொருத்தமான விழுமியங்களை வகுப்பறையில் பெறுமதிமிக்கவையாக ஆக்கிக் கொள்வது ஆசிரியரின் கையிலேதான் தங்கியுள்ளது. இதை ஒரு சவாலாக ஏற்று ஆசிரியர்கள் களத்தில் இறங்க வேண்டும்.

♦ வெளியீட்டாளர்: **வெளியீட்டுக்குழு**

திரு அ.கயிலாயபிள்ளை.(அதிபர்)
யா/சாவகச்சேரி
இந்துக் கல்லூரி
(தேசிய பாடசாலை)

ஆலோசனை:
திரு வே.கந்தசாமி
பிரதி அதிபர்

திரு ந. பாலச்சந்திரன்
பிரதி அதிபர்

திரு.த.இரத்தினம்
உப அதிபர்

♦ பிரதம ஆசிரியர் :
திரு க.முத்துலிங்கம்

♦ஆசிரியர் :
திருமதி வி.மகேந்திரன்
(தமிழ்)

திருமதி தே.கமலேஸ்வரன்
(ஆங்கிலம்)

♦ கணனி வடிவமைப்பு.
திரு. ஆ.வைகுந்தன்

♦கணனிப்பதிவு:

திருமதி க.நளாயினி

அனுசரணை: ஆசிரிய சகோதரத்துவம் சாவகச்சேரி இந்துக்கல்லூரி

Web.WWW.ChC.sch.lk

Email.chavahindu@gmail.com

FROM , PRINCIPAL,
J/CHAVAKACHCHERI
HINDU COLLEGE
CHAVAKACHCHERI
T.P 0213215189
T.P.No:021 2270350/ 021 2270351

TO, ...

.....

.....

.....